**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60/2024**

**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மாயாண்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நல்லகாமு தேவர்** | **Calling** | : | |
| **Village** | : | **மாங்கரை** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **59** |
| | | | **Dated** | : | **11.12.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

**பட்டியல் சாட்சி 10 திரு. மாயாண்டி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 9 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 06.08.2023 ம் தேதி இரவு 08.00 மணி அளவில் நானும், ராஜேந்திரனும் கொட்டாரபட்டி பிரிவு, கன்னிவாடி அருகே நின்று பேசிக் கொண்டு இருந்தபோது, கன்னிவாடி காவல் ஆய்வாளர் ஜீப்பில் வந்தார்கள். அங்கு வைத்து ராஜாவிடம் ஒரு வாக்குமூலம் வாங்கினார்கள். புகழ்நாதனை தான் தான் அடித்ததாக, ராஜா வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் எழுதிக் கொண்டார். அதன் பிறகு என்னிடமும், ராஜேந்திரனிடமும் சாட்சியாக ஆய்வாளர் கையெழுத்து வாங்கி கொண்டார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது

தான். அந்த கையொப்பம் மட்டும் Ex. P8. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

இறந்து போன புகழ்நாதன் எனது உறவினர் என்றால் சரிதான். நானும், ராஜேந்திரனும் மட்டும் தான் அங்கு பேசிக் கொண்டு இருந்தோம். அங்கு வேறு யாரும் இல்லை. எதிரி ராஜவை அன்றைய தினம் மதியமே காவல் நிலையத்தில் பிடித்து வைத்து இருந்தார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் செல்வதற்கு முன்பே, எதிரியை போலீசார் பிடித்து வைத்து இருந்தார்கள் என்றும், அதனால் அவர்கள் எதிரியை விசாரித்தது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் டைப் செய்த பேப்பரில் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல, போலீசார் நான் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை போலீசார் விசாரிக்கவில்லை என்றும், எதிரி என் முன்னிலையில் எவ்வித வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றும், இறந்து போன புகழ்நாதன் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ Digitally signed by R KANAGARAJ Date: 2024.12.11 18:09:13 +0530